ஓடி ஓடி ஏன் அலைகின்றாய்
ஒரு நிலை நில்லாது உறுதியும் கொள்ளாது
இரு வினை வெல்லாது குருவினை கொள்ளாது ( ஓடி)

கூடிக்கூடி குரு நாதன் புகழ்
பாடி கொண்டு வந்த வினைப்பயனை ஓட்டாது

பாபம் புண்ணியம் பாங்காய் அறிந்தும் நீ
பாபம் செய்ய மட்டுமே துணிந்தாய் - பெரும்
கோபமும் தாபமும் கொண்டே உலகினில்
கோள் பல சொல்லி நீ வாழ்கின்றாய்

காமத்தையும் கடும் கோபத்தையும் நீ
ஒரு கணமேனும் விடவில்லை - நல்ல
நேமத்தையும் குரு நாமத்தையும் நீ
நினைவில் ஏன் தான் வைக்கவில்லை

உடலை விட்டே உன்னுயிர் நீங்கும்
உற்றார் பெற்றார் உடன் வாரார் - வெரும்
சடலத்தை வைத்தே சற்று நேரம் அழுவார்
சாச்வதமாய் அவர் பின் தொடரார்

ஞானமும் கல்வியும் நம் வினைப்பயனே
நன்றாய் அறிவாய் சகஜமே
ஞானானந்தனை நாளும் துதித்தால்

நன்மையே அடைவாய் இது நிஜமே

பிறக்குமுன் ஜாதி மத பேதமில்லை
பிறந்த பின் ஏன் தானோ நீ விடவில்லை
அனித்யமான இவ்வாழ்கையின் தொல்லை
அறவே ஒழிய நீ கேள் ஒரு சொல்லை

எழை தனவான் என்றே இறைவன்
ஏட்டினில் ஒறு போதும் எழுதவில்லை
எல்லாம் நம் வினய் பயன் உணர்ந்தாலோ
எற்ற தாழ்வுக்கோர் இடமும் இல்லை

பாசங்கள் கொண்டே பாரினில் பிறந்தே
பற்பல வேதனை அனுபவிப்பாய் - ஹரி
தாசனும் சொன்னேன் நிஜமே
ஸத்குரு ஞானனந்தனையே துதிப்பாய்